<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.173 /2019</u>

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் நாள் வெள்ளி கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி. பஷீரா, பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெய்னுலாப்தீன் | தொழில் | : |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : சையத் தாவூத் சாகிப் | வட்டம் | : |
| கிராமம் | : வாலிகண்டாபுரம் | சமயம் | : |
| சாதி | : | வயது | : 75/2022 |

**4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) இவ்வழக்கின் விவரங்களையும் என்னுடைய முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தின் சங்கதிகளையும், நான்தான் என் வழக்கறிஞருக்கு சொன்னேன். நான் 2003–ம் ஆண்டு ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். இவ்வழக்கை ஆரம்பத்தில் நத்தம் சர்வே எண் 462/34 என்று குறிப்பிட்டுதான் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்குடன் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் கோரிய மனு மற்றும் இடைக்கால தடையுறுத்து கோரிய மனுவிலும் மேற்படி நத்தம் சர்வே எண் 462/34 என்றுதான் குறிப்பிட்டுருந்தேன் என்றால் சரிதான்.

(ii)மேற்படி மனுவின் மீதான உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் 04.09.2012–ம் தேதி நிலஅளவையருடன் வழக்கு சொத்தை பார்வையிட்டு அளந்தார் என்றால் சரிதான். அப்போது நானும் என் வழக்கறிஞரும் உடன் இருந்தோம் என்றால் சரிதான். மேற்படி நிலம் அளந்தது தொடர்பாக ஆணையர் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு மீண்டும் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை 25.07.2015–ம் தேதி அளந்தார் என்றால் சரிதான். அப்போதும் நானும் என் வழக்கறிஞரும் உடன் இருந்தோம் என்றால் சரிதான்.

(iii)மேற்படி 25.07.2015 தேதியிட்டு அளந்ததின்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதனை எனது

வழக்கறிஞும் நானும் படித்து தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் **நீ.ம.சா.ஆ.–2** ஆவணத்தில் கண்டுள்ள அளவுகள் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கை மீது நான் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கைக்கு பின்னிட்டுதான் வழக்கு சொத்தின் சர்வே எண் 462/34 என்பதை 462/34A என மாற்றம் செய்ய என் தரப்பில் 31.01.2018– ம் தேதி மனு செய்துகொள்ளப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய வழக்குரை படி தாவா சொத்தின் அளவை வடபுறம் கீழ மேலாக 1.6 மீ. என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தென்புறம் கீழ மேலாக 3.6 மீ. என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேல்புறம் தென்வடல் 3.2 மீ எனவும் கீழ்புறம் தென்வடல் 4.2 மீ எனவும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

(iv)**நீ.ம.சா.ஆ.–2** மற்றும் **நீ.ம.சா.ஆ.–3** ஆவணத்தில் வழக்கு சொத்தானது வடபுறம் கீழமேலாக 3.2 என்றும் தென்புறம் கிழமேலாக 4.2 என்றும் மேற்புறம் தென்வடல் 3.8 என்றும் கீழ்புறம் தென்வடல் 1.6 என்றும் காட்டியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்குரியது என்று, கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தாவா சொத்தை பிரதிவாதியிடமிருந்து வேண்டும் என்றும் கோரியும் தாவாவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்குரையின் சொத்து விவரத்தில் ஆஸ்பெஸ்டாஸ் போடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் நடத்திவருவதாக கூறும் சிக்கன் கடையின் பெயர் இலியாஸ் என்றும் அதன் கதவு எண் 2/281 என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

(v)**வா.சா.ஆ–3** ஆவணத்தில் கதவு எண் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் சரிதான். **வா.சா.ஆ.–2** ஆவணத்தில் இலியாஸ் சிக்கன் கடை என்று பெயர் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் சரிதான். 4–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விவரங்களை நான் இதுநாள் வரை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. எனது அம்மாவின் பெயர் குல்சம் பீவி அப்பா பெயர் சையத் தாவூத் சாகிப். எனது சகோதரர்கள் பெயர் கமாலுதீன், ஜமாலுதீன். தாவா

சொத்து எனது அம்மாவுக்கு மகர் சொத்தாக கிடைக்கப்பெற்றது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எந்த வருடம் யாரிடமிருந்து தாவா சொத்து மகராக எனது அம்மாவுக்கு கிடைக்கப்பெற்றது என்றால் எனது அப்பா அம்மாவிற்கு எழுதி கொடுத்துள்ளார் எந்த தேதி என்று எனக்கு தெரியாது. மேற்படி சங்கதியை என்னுடைய வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய சொத்துக்கள் எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்களான பத்திரமோ, பட்டாவோ எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(vi)தாவா சொத்தின் அளவுகளான கிழமேல் ஜாதியடி 19.50 தென்வடல் ஜாதியடி 40.00 எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். பழைய நத்தம் சர்வே எண் 227/1–ல் 780 சதுரடி எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். மேற்படி 780 சதுரடியில் 33 ச.மீ. அரசு நான்கு வழி சாலைக்காக கையகப்படுத்திக் கொண்டார்கள் என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கையகப்படுத்தப்பட்ட பகுதி போக மீதத்தைதான் தாவா சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 33 ச.மீ. என்பது 355.08 சதுரடி என்றாலும், அதனை கழித்துபோக மீதம் 424.92 சதுரடியை தாவா சொத்தாக காட்டியிருக்கவேண்டும் என்றாலும் நான் 105 சதுரடியைதான் தாவா சொத்தாக காட்டியுள்ளேன் என்றாலும் சரிதான்.

(vii)முதலில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையிலோ, திருத்தப்பட்ட வழக்குரையிலோ தாவா சொத்தின் 4 எல்லைகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகே நத்தம் சர்வே எண் 462/36, 462/37 எனக்கும் எனது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நத்தம் சர்வே எண் 462/36–ல் 78 ச.மீ–க்கு பட்டா எண் 528–ஆனது எனக்கும், சாலிகான் பீவிக்கும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நத்தம் சர்வே எண் 462/37–ல் 75 ச.மீ–க்கு பட்டா எண் 521–ஆனது

எனக்கும், எனது சகோதரர் ஜமாலுதீனுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா ஆனது 1993–94 நத்தம் மனைவரி திட்டம் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். குறைவாக கொடுக்கப்பட்டுள்ளது என்று நான் மனு செய்துள்ளேன். யாருக்கு மனு செய்தேன், எவ்வளவு அளவு குறைவு என்று மனு செய்தேன் என்றாலும், பெரம்பலூர் நத்தம் நிலஅளவையர் இயக்குநருக்கு மனு செய்தேன் மற்ற விவரங்கள் எனக்கு ஞாபகம் இல்லை.

(viii)எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் மேற்படி பட்டா கொடுத்த தேதிக்கு பின்னிட்டு அதே வருடத்தில் கொடுத்தேன். மேற்படி பட்டா கொடுத்தபோதே தாவா சொத்தான 105 சதுரடி எனக்கு வழங்கப்பட்ட பட்டாவில் நத்தம் சர்வே எண் 462/36 மற்றும் 462/37 ஆகியவற்றில் எனக்கும், என்னுடைய சகோதரர்களுக்கும் கொடுத்திருக்க வேண்டும். மாறாக மேற்படி 105 சதுரடி தாவா சொத்து 4–ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 4–ம் பிரதிவாதி பெயரில் தவறுதலாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வழக்குரையில் தாவா சொத்திற்கு 4–ம் பிரதிவாதி பெயரில் தவறுதலாக நத்தம் நிலவரி திட்டத்தில் பட்டா கொடுக்கப்பட்டது தவறு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1993–94–ல் 4–ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டா தவறு என்று 2010–ல் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2010–ம் ஆண்டுதான் எனக்கு தெரியவந்தது.

(ix)எனது வழக்குரையில் பிராதின் 7–வது பத்தியில் அரசாங்கத்தால் சாலைக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டபோதுதான் எனக்கு தெரியவந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2003–ம் ஆண்டு எனது நிலம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அதற்குரிய சட்டப்படியான நடைமுறையில் பின்பற்றப்பட்டுதான் நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றாலும், அதற்குரிய நஷ்ட ஈட்டு தொகையை நான் பெற்றுள்ளேன் என்றாலும் சரிதான். சர்வே எண் 462/36–ல் 38 ச.மீ. 462/37–ல் 75 ச.மீ. மேற்படி கையகப்படுத்தப்பட்டு, அதற்கு நான் நஷ்ட ஈட்டு

தொகையை பெற்றேன் என்றால் சரிதான். அப்போது சர்வே எண் 462/34 4–ம் பிரதிவாதியின் பெயரில் தவறுதலாக பட்டா இருந்ததால் மேற்படி சர்வே எண்ணில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு உண்டான நஷ்ட ஈட்டு தொகையை 4–ம் பிரதிவாதி பெற்றார் என்றால் சரிதான். மேற்படி 4–ம் பிரதிவாதி பெற்ற நஷ்ட தொகை எனக்கு சேரவேண்டியது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

(x)தாவாவில் தாவா சொத்திற்கு 4–ம் பிதிவாதி பெயரில் தவறுதலாக கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி செயலுறுத்து கட்டளை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். 4–ம் பிரதிவாதி பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது சரியானதுதான் என்றாலும், அவ்வாறு கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு 1993–ம் ஆண்டிலேயே தெரியும் என்றாலும் வழக்குரையில் 2003–ம் ஆண்டே தெரியவந்ததாக சொல்லிவிட்டு தற்பொழுது 2010–ம் ஆண்டில்தான் எனக்கு தெரியவந்தது என்று முரண்பட்டும் பொய்யாகவும் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 2006–ம் ஆண்டு அரசு சாலைக்காக நிலம் கையகபடுத்தப்பட்டபோதே எனக்கு விவரம் தெரியும் என்றாலும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எனக்கு உண்மையில் பாத்தியப்பட்டிருந்தால் அப்போதே சர்வே எண் 462/36, 462/37 ஆகியவற்றிற்கு இழப்பீட்டு தொகை வாங்காமல் ஆட்சேபணை செய்திருப்பேன் என்றாலும், அப்போதே ஆட்சேபணை செய்திருக்காமல் தற்போதே தாவா சொத்தை எனக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்வது முரண்தடையால் பாதிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் அதனால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது . )